**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**6 |
| Name | : | **சாந்தி (தொழிலாளர் துணை அலுவலர்)** |
| Father's / Husband Name | : | **நடராஜ்** |
| Address | : | **திருச்சி** |
| Age | : | 56/2025 |

**தேதி : 06.05.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சியில் தொழிலாளர் துணை ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூரில் தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். 08.06.2020 அன்று சத்திரமனை, பொம்மனப்பாடி இடையே உள்ள பகுதியில் இரண்டு சிறுவர்களை கொத்தடிமைகளாக வைத்து ஆடு மேய்பதாக Child Line 1098 க்கு தகவல் கிடைத்தது. Child Line ல் பணியாற்றிய உறுப்பினர் பட்டு என்பவர் ் மேற்படி தகவலை எங்களுக்கு தெரிவித்தார். மேற்படி தகவலை பெற்று கோட்டாட்சியர் தலைமையில் தொழிலாளர் உதவி ஆணையர் பாஸ்கர், நானும், தொழிலாளர் துணை ஆய்வாளர் ஜெயராஜ் ஆகியோர்கள் சென்றோம். எங்களுடன் கிராம நிர்வாக அலுவலர் சசிகலா Child Line உறுப்பினர்கள் திவ்யா, சத்தியராஜ், பட்டு ஆகியோருடன் அவர்களுடைய இயக்குநர் ஆகியோர்களும் பொம்மனப்பாடியில் உள்ள மலை அடிவாரத்திற்கு சென்றோம். அங்கு இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்த்துகொண்டிருந்தார்கள்.

அவர்களை அழைத்துவிசாரித்தபோது அவர்களுடைய பெயர் முருகன் மற்றும் மதி (எ) மதியழகன் என்று சொன்னார்கள்.

சிறுவர்களை கண்ணன் என்பவர் சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ரூ.60,000/- பணம் கொடுத்து ஆடு மேய்க்க அழைத்துவந்ததாக சொன்னார்கள். அவர்களை அங்கிருந்து மீட்டு வந்து குழந்தைகள் நல குழுவில் ஒப்படைத்தோம். கோட்டாட்சியர் விசாரணை நடத்தி சிறுவர்களுக்கு தலா இருபது ஆயிரம் உதவி தொகை வழங்க உத்தரவிட்டார். அதன்படி எங்களுடைய அலுவலகத்தின் மூலம் சிறுவர்களுக்கு உதவி தொகை வழங்கப்பட்டது. சிறுவர்களை கொத்தடிமைகளாக பயன்படுத்திய கண்ணன் என்பவர் மீது கிராம நிர்வாக அலுவலர் சசிகலா என்பவர் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

போலீஸார் விசாரணையில் Child LIne க்கு போன் வந்ததாக சொல்லியுள்ளேன். பட்டு என்பவர் தகவல் சொன்னதாக போலீஸார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்றபோது மதியம் 1.00 மணி இருக்குமா என்றால் மாலை 4.00 மணி இருக்கும். ஆடு மேய்த்துகொண்டிருந்தவர்களை நான் கண்ணால் பார்த்தேன். வெள்ளை ஆடுகள் மேய்த்தார்களா என்றால் ஆட்டின் வகை எனக்கு தெரியாது, சுமார் 20 ஆடுகளுக்கு மேல் இருக்கும். பக்கத்தில் வீடுகள் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு பக்கத்தில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. சிறுவர்களுக்கு உதவி தொகையாக ரூபாய் இருபது ஆயிரம் கொடுத்த விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீஸார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை, காலையா, மாலையா என்றால் காலை.

சிறுவர்களின் தந்தை பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் என்னுடைய அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ஜீப்பில் சென்றேன்.

சம்பவ இடத்திற்கு சுமார் 5 வாகனங்களில் சென்றோம். 08.06.2020ம் தேதி அன்றே Child Line க்கு தகவல் வந்தது என்றாலும், அன்றே சம்பவ இடத்திற்கு சென்று சிறுவர்களை மீட்டோம் என்றால் சரிதான். சசிகலா 09.06.2020ம் தேதி அன்று புகார் கொடுத்தார். பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எனக்கு Child Line லிருந்து அழைப்பு வரவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சிறுவர்களை மீட்கவில்லை என்றாலும் சரியல்ல.நான் அரசு தரப்பிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.